# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2245/13 - 2021 සැප්තැම්බර් මස 15 වැනි බදාදා - 2021.09.15

*2245/13 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (1அ) என்னும் பிரிவின் கீழ் மஹரகம நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

மஹரகம நகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும் ;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1) (1அ) ஆம் பிரிவின் கீழ், மஹரகம நகர சபையின் 12 ஆம் இலக்க கொட்டாவ கிழக்கு வட்டாரத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட ராஜபக்ஸ மொஹொட்டிகே கரோலிஸ் என்பவர் அங்கம் வகிக்கின்ற சுயேச்சைக் குழு இல. 02 இன் தலைவர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையற்றவரல்லாத வேட்பாளரொருவராக 8 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவர், உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அந்த சுயேச்சைக் குழுவைச் சேர்ந்தவருமான மஹரகம நகர சபையின் 12 ஆம் இலக்க கொட்டாவ கிழக்கு வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாகத் தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட் டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட சுயேச்சைக் குழு இல. 02 இன் குழுத் தலைவரால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக கல்கந்த ஆரச்சிகே சுனில் பியரத்ன என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;

இப்போது மஹரகம நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான வேவெல்வல ஹேவகே ரவீந்திர விஜய குமார ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(1அ) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு கல்கந்த ஆரச்சிகே சுனில் பியரத்ன என்பவர் மஹரகம நகர சபையின் 12 ஆம் இலக்க கொட்டாவ கிழக்கு வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**டபிள்யூ. எச். ஆர். விஜய குமார,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
மஹரகம நகர சபை.

மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,
கொழும்பு,
*2021, செத்தெம்பர் 14.*

*10-181*


1A - G 34953 — 30 (2021/09) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*